முச்சந்தி முரளி




“கடைசியா இருந்த நம்பிக்கை நட்சத்திரமும் சரிஞ்சு போச்சுதே”


Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 218

திங்கட்கிழமை
01 ஜூலை 2024

ஆனி 17 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055




# பெருந்தலைவர் சம்பந்தர் மறைவு!

## தமிழ் மக்களுக்கு பேரிழப்பு
## நாடாளுமன்றிலும் அஞ்சலிக்கு ஏற்பாடு

**கொழும்பு, ஜூலை 1**

**இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன் கொழும்பில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இரவு 11 மணியளவில் தனது 91 ஆவது வயதில் காலமானார்.**

☞ 11

## ஊசிக்குப் பயந்தோடியவர் வாகனத்தில் மோதிச் சாவு!

வவுனியா, ஜூலை 1

வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கிருந்து தப்பிச் சென்றவர் வீதியில் சடலமாக மீட்கப்பட்டார்.

வவுனியா, ஆச்சிபுரம் பகுதியைச் சேர்ந்த லியோசியஸ் டெல்சன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார்.

இவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த

☞ 11

### ஜனாதிபதித் தேர்தல்

## பெரமுனவின் முடிவு ஜூலை 20 அறிவிப்பு!

### பெரமுனவுக்குள் பரபரப்பு

கொழும்பு, ஜூலை 1

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தமது கட்சியின் அதிகாரபூர்வ நிலைப்பாட்டை எதிர்வரும் 20ஆம் திகதி பொதுஜன பெரமுன அறிவிக்கவுள்ளது என்று தெரியவருகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கட்சியின் இறுதி முடிவை எடுப்பதற்காக எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் பெரமுனவின் நிறைவேற்றுக்குழு கூடவுள்ளது.

இதன் தொடர்ச்சி

☞ 11



## கதிர்காமம் செல்ல காட்டுப்பாதை திறப்பு

திருகோணமலை, ஜூலை 1

வரலாற்றுப் பிரசித்திபெற்ற கதிர்காமம் ஆடிவேல் விழா உற்சவத்தையொட்டிய கதிர்காமத்துக்கான குமுண தேசிய பூங்கா ஊடான காட்டுப்பாதை, விசேட பூஜை வழிபாட்டுடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

☞ 11

## வெளிநாட்டு ஆசையால் 50 லட்சம் 'அம்போ'!

### மோசடி செய்த பெண் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 1

வெளிநாடு அனுப்புவதாக 50 இலட்சம் ரூபா பண மோசடி செய்த பெண்ணொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை ஐரோப்பிய நாடொன்றுக்கு அனுப்புவதாக ஆசை

☞ 11

## புலிகளுக்கு ஆயுதங்கள் ஜே.வி.பி. வழங்கியதா?

### விசாரணை கோருகிறார் நாமல்

கொழும்பு, ஜூலை 1

ஜே.வி.பி.யினர் புலிகளுக்கு ஆயுதம் வழங்கினர் என இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் கூறிய விடயம் தொடர்பில் விசாரணை நடத்தப்படவேண்டும் - இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச வலியுறுத்தியுள்ளார்.

☞ 11

### நயினாதீவில்

## வெட்டியவர் மாட்டினார்!

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்ப்பாணம் - நயினாதீவில் கப்பல் திருவிழாவின் போது இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

☞ 11

## இரணைமடுவில் மூழ்கிய சிறுவனின் சடலம் மீட்பு

கிளிநொச்சி, ஜூலை 1

கிளிநொச்சி, இரணைமடுக் குளத்தில் நீராடச் சென்ற 14 வயதுச் சிறுவனொருவன் காணாமற்போன நிலையில் நேற்று அவரது சடலம் மீட்கப்பட்டது. முறிகண்டி, வசந்த நகர் பகுதியைச் சேர்ந்தவரும்

☞ 11



## மந்திகையில் விபத்து; குடும்பஸ்தர் சாவு!

யாழ்ப்பாணம், ஜூலை 1

வடமராட்சி - மந்திகைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த இளம் குடும்பஸ்தரொருவர் உயிரிழந்

☞ 11

### பாடசாலைகளுக்கு அருகில் இன்று

## கறுப்புக்கொடிப் போர்

கொழும்பு, ஜூலை 1

நாட்டிலுள்ள பாடசாலைகளுக்கு அண்மையில் இன்று கறுப்புக்கொடிப் போராட்டமொன்று மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களால் அண்மையில் முன்

☞ 11

### நல்லூர் ஆலயச் சூழலில்

## புனிதத்தையும், பாதுகாப்பையும் பேணுவதை உறுதிப்படுத்துக!

**மாநகரசபையிடம் வேலன் சுவாமிகள் கோரிக்கை**

☞ 11


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் ஒப்பந்தத்தை ஏற்பதா? இறுதிநேரத்திலேயே முடிவு

## ஐ.ம.சக்தி அறிவிப்பு



**கொழும்பு, ஜூலை 1**
**கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம் குறித்த விவாதத்தில் பங்கேற்போம். வாக்கெடுப்பு தொடர்பில் இறுதி நேரத்திலேயே தீர்மானிப்போம் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.**

இதுதொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்க்கட்சி பிரதம கொறடாவும் நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளதாவது:-
இந்த ஒப்பந்தங்கள் சம்பந்தமாகவும், அரசாங்கம் வெளிப்படுத்தியுள்ள தரவுகள் சம்பந்தமாகவும் ஆழமான கவனம் செலுத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் 2ஆம், 3ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் இந்த ஒப்பந்தம் சம்பந்தமாக நடைபெறுகின்ற விவாதத்தில் நாம் பங்கேற்போம். எனினும், விவாதத்தின் இறுதியில் நடைபெறும் வாக்கெடுப்பில் பங்கேற்பதா?, இல்லையா? என்பதை நாம் கடைசி நேரத்திலேயே தீர்மானிக்கவுள்ளோம்.
கடன் மறுசீரமைப்பால் பொதுமக்களுக்கு எவ்விதமான நன்மைகளும் இல்லை. அவ்விதமான மறுசீரமைப்பை ஆதரிப்பதென்பது முட்டாள்தனமான செயற்படாகும் -என்றார். (ச-இ)

# ராஜபக்சக்களிடம் செல்லமாட்டேன்!

## விமல் ஆணித்தரம்



கொழும்பு, ஜூலை 1
ராஜபக்சக்களுடன் மீண்டும் இணையும் எண்ணம் தனக்கு இல்லை என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.
"மஹிந்த ராஜபக்சவின் ஆலோசனையின் பிரகாரம் விமல் வீரவன்ஸவுடன் பேச்சு நடத்தினேன். அவர் மொட்டுக் கூட்டணியுடன் இணைவார். வாசுதேவ நாணயக்காரவும் வருவார்" என்று ராஜபக்ச குடும்ப உறுப்பினரும், ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவருமான உதயங்க வீரதுங்க அண்மையில் தெரிவித்திருந்தார்.
அதற்குப் பதிலளிக்கும் வகையில், தனக்கு அவ்வாறானதொரு எண்ணம் இல்லை, சர்வஜன அதிகாரத்துடன்தான் பயணம் தொடரும் என்று விமல் வீரவன்ஸ குறிப்பிட்டுள்ளார். (ச-44)

# ரணில் –பெரமுன அடுத்த வாரம் சந்திப்பு

கொழும்பு, ஜூலை 1
ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையிலான முக்கியமான சந்திப்பொன்று அடுத்தவாரம் நடைபெறவுள்ளது என்று தெரியவருகிறது.
பொதுஜன பெரமுனவின் முன்னாள் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்சவுக்கும் , ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் பல்வேறு சந்திப்புகள் கடந்த காலத்தில் இடம்பெற்ற போதிலும், எவ்வித இணக்கப்பாடுகளும் எட்டப்படாமலேயே அந்தச் சந்திப்புகள் முடிவுற்றன.
இந்த நிலையில் தற்போது ஜனாதிபதித் தேர்தலுக்கான நாள்கள் நெருங்கயுள்ளதாலும் இரண்டுக் கட்சிகளும் ஆளுங்கட்சியாக இருப்பதாலும் கட்டாயம் கூட்டணியொன்றை அமைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.
அடுத்தவாரம் ஜனாதிபதியுடன் நடைபெற உள்ள இந்த சந்திப்பில் மஹிந்த ராஜபக்ச, பஸில் ராஜபக்ச உட்பட கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் கலந்து கொள்ள உள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)

# பிள்ளையானுக்கு விசிலடித்த மனுஷ

கொழும்பு, ஜூலை 1
இராஜாங்க அமைச்சர் பிள்ளையான், "பொன் வானில் மீன் உறங்க பூந்தோப்பில் தேன் உறங்க அன்பே உன் ஞாபகத்தில் எங்கே போய் நான் உறங்க..." எனும் பாடலைப் பாட, அமைச்சர் மனுஷ குதூகலித்துள்ளார். தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் பாட்டுப் பாடியுள்ளார்.
இதன்போது அமைச்சர் மனுஷ விசில் அடித்து, பிரமாதம் எனக்கூறி பிள்ளையானை உற்சாகப்படுத்தியுள்ளதுடன் பிள்ளையான் என்றதும் எமக்கு போராளி என்றே சிந்தனைக்கு வரும். எனினும் அவர் அற்புதமான மனிதன் என்று குறிப்பிட்டுள்ளார். (ச-44)

# மிளகாய் ஐஸ்கிறீம் நாட்டில் தயாரிப்பு

கொழும்பு, ஜூலை 1
இலங்கையில் முதன்முறையாக மிளகாயில் இருந்து ஐஸ்கிறீம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்தத் தயாரிப்பு விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் நவீனமயமாக்கல் திட்டத்தின் தொழில்நுட்ப மற்றும் நிதி பங்களிப்பின் கீழ் செய்யப்பட்டுள்ளது.
எதிர்காலத்தில் இந்த மிளகாய்கள் ஐஸ்கிறீம் சந்தைக்கு வரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# காரியசகா பதவியை மீள உருவாக்க உள்ளூராட்சிச் சபைகள் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 1
உள்ளூராட்சிச் சபைகளில், மாகாணசபைகளால் வெறிதாக்கப்பட்ட காரியாலய காரியசகா (கே.கே.எஸ்.) பதவியை மீண்டும் உருவாக்க உள்ளூராட்சிச்சபைகள் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரியவருகிறது.
நீண்டகாலமாக உள்ளூராட்சிச்சபைகளில் செயற்பட்டு வந்த காரியாலய காரியசகா பதவி, மாகாண சபைகளால் கடந்த 2009 ஆம் ஆண்டு வெறிதாக்கப்பட்டு. அப்பாவிகள் கனிஷ்ட தொழிலாளர் பதவி என்ற பெயருடன் இயங்கிவருகிறது.
இந்த நிலையில், தற்போது உள்ளூராட்சிச்சபைகளில் கடமையாற்றும் தற்காலிக மற்றும் அமைய பதவிகளில் உள்ளவர்கள் நிரந்தரப் பதவியில் அமர்த்த அரசினால் அறிவிக்கப்பட்டது. 180 நாள்கள் தொடர்ச்சியாகக் கடமையாற்றிய பதவிகளில் உள்ளவர்களின் விவரங்கள் மாகாண சபையினால் கோரப்பட்டுள்ளது. (ப-9)



# தென்பகுதி மாணவர்கள் வடபகுதிக்குப் பயணம்!



யாழ்ப்பாணம், ஜூலை 1
இனநல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் தென்பகுதி மாணவர் குழு ஒன்று யாழ்ப்பாணத்துக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை வந்திருந்தது.
முன்னாள் சபாநாயகர் கருஜயசூரியவின் சூரிய கற்கை நிறுவனத்தில் 2 ஆம்மொழியாகதமிழ்மொழியைக் கற்கும் சிங்கள மாணவர்கள், வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள இரண்டாம் மொழி கற்கை நிறுவனமான சூரிய கற்கை நிறுவனத்துக்கு வந்திருந்தனர்.
நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், திருமதி யசோதை சரவணபவன், சூரிய கற்கை நிறுவனத்தின் இயக்குநர் ஜெயதிலக்க, சூரிய நிறுவி இணைப்பாளரும் மொழி பெயர்ப்பாளருமான தெ.உதயரூபன், சூரிய கற்கை நிறுவனத்தின் வடமாகாண இணைப்பாளர்பிறேம், சூரிய கற்கைநிறுவனத்தின் மாணவத் தலைவரும் கிராம அலுவலருமான குணாஸ், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கச்சதீவுக்கு அனுமதி இணக்கம் இல்லை!



## அலி சப்ரி தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 1**

**கச்சதீவில் சில செயற்பாடுகளை இந்தியா முன்னெடுப்பதற்கு பாக்குநீரிணையில் எல்லை தொடர்பில் எந்தவிதமான புதிய ஒப்பந்தமும் எட்டப்படவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.**

கச்சதீவு தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லை குறித்தும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் புதிய ஒப்பந்தம் எட்டப்பட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

அந்தச் செய்தி தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் இருநாடுகளும் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாடுகள் தொடர்பான விவரங்கள் வெளியிடப்படவில்லை. அவ்வாறான பேச்சு எவையும் முன்னெடுக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# ஒக்ரோபர் மாதத்தில் வாகன இறக்குமதி?

கொழும்பு, ஜூலை 1

ஒக்ரோபர் மாதத்தில் நாட்டின் மிக அத்தியாவசிய சேவைகளுக்குத் தேவையான வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அம்புலன்ஸ், குப்பை சேகரிக்கும் பாரவூர்திகள், தொழில்துறை மற்றும் கட்டுமானத்துக்குத் தேவையான தொழிற்சாலை வாகனங்கள் போன்றவற்றை இறக்குமதி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனினும் கார்கள், வான்கள், கப் ரக வாகனங்கள் போன்ற தனியார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான வாய்ப்பை அடுத்த ஆண்டு வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. (ச-இ)





# இணைய மோசடி; 30 சீனர்கள் கைது

கொழும்பு, ஜூலை 1

இணையவழி நிதிமோசடியில் ஈடுபட்ட 30 சீனப் பிரஜைகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அவர்களிடமிருந்து பல மடிக்கணினிகள் மற்றும் கையடக்க தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. முன்னதாக இலங்கையில் இருந்து இணையவழி நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 137 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# திடீர்ப் பணக்காரர்கள் நாட்டில் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 1

இலங்கையில் பலர் திடீரென பணக்காரர்களாக மாறியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திடீர்ப் பணக்காரர்கள் தொடர்பில் பொலிஸாருக்கு நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. சிலர் திடீரென பணக்காரர்களாகிவிட்டதாகவும், அவர்கள் பணக்காரர்களாக மாறுவதற்கான காரணம் சூட்சுமாக உள்ளதெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பில் பொலிஸார் விசாரணைகளை துரிதப்படுத்தியுள்ளனர். (ச-இ)

# ரணிலின் கூட்டணிக்கு விஜிதமுனி அழைப்பு

கொழும்பு, ஜூலை 1

ஐக்கிய மக்கள் சக்திமீது கடும் அதிருப்தியில் இருக்கும் அந்தக் கட்சியின் உறுப்பினரான முன்னாள் அமைச்சர் விஜிதமுனி சொய்சாவுக்கு, புதிய கூட்டணியில் இணையுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குச் சார்பான புதிய கூட்டணியின் மக்கள் கூட்டம் மொனராகலையில் அண்மையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய உறுப்பினர்களே இந்த அழைப்பை விடுத்தனர். அதேவேளை, விஜிதமுனி சொய்சா விரைவில் தமது அணியுடன் இணைவார் என்று புதிய கூட்டணியின் முக்கியஸ்தரான நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார். (ச-44)

# பொதுப் போக்குவரத்து அத்தியாவசிய சேவை

## வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, ஜூலை 1

பொதுப் போக்குவரத்துச் சேவைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தி அதிவிசேட வர்த்தமானியொன்று வெளியிடப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைச் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய ஜனாதிபதி செயலாளரால் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி பயணிகளுக்கும் பொருள்களுக்குமான பொதுப் போக்குவரத்துச் சேவைகள் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. (ச-இ)

# சுற்றுலாப் பயணிகள்; 10 இலட்சம் கடந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 1

இந்த ஆண்டின் இதுவரை காலப்பகுதியில் இலங்கைக்கு பிரவேசித்துள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 10 இலட்சத்தைத் தாண்டியுள்ளது என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இலங்கையின் 1,000,000 ஆவது சுற்றுலாப் பயணியை வரவேற்கும் முகமாக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருகை முனையத்தில் நிகழ்வொன்று நடைபெற்றது. (ச-இ)

# தினம் தெரியுமோ?

**மு**ந்தநாள் சொன்ன நல்லூர்க் கோயில் விசயமா 'பட்சி வடிவா அலசி ஆராயமல் எழுதிப் போட்டுது' எண்டு ஒரு முறைப்பாடு போனில வந்தது.


'அவை முருகன் கோயிலுக்கு எதிராக் கேஸ் போடேலை. முனிசிபலுக்கு எதி ராத்தான் போட்டவை' எண்டு அவர் பட்சிக்கு பாடமெடுக்கத் தொடங்கினார்.

'முனிசிபலுக்கு எதிரா என்ன கேஸ்? குப்பை அள்ளேலை எண்டோ? இல்லாட்டி வாய்க்கால் கட்டேலை எண்டோ?' எண்டு பட்சி கேக்க,

'இல்லை, முருகன்கோயில் திருவிழாக் காலத்தில முனிசிபல் வீதித்தடை போடுற தெல்லோ. அது போட்டால், அந்த ஏரியாவுக்க திருவிழா முடியும் மட்டும் முனிசிபல் சட்டம்தான் செல்லுமெண்டு முந்தி இருந்த ஆணையாளர் ஒரு கெஸட் (வர்த்தமானி) வெளியிட்டவர். அதுக்கு எதிராத்தான் கேஸ்' எண்டு அவரும் தன்ர பங்குக்கு விளக்கினார். ஆனால் எப்பிடிப் பார்த்தாலும், வீதித்தடை பற்றி முனிசிபலுக்கு எதிராப் போட்டாலும் முருகன்கோயிலுக்கு எதிராப் போட்டாலும் ஒண்டுதானே? முனிசிபல்காரர் என்ன தங்கட வீட்டுக்கொண்டாட்டத்துக் காகவோ உந்த வீதித்தடையைப் போடுகினம்? கோயில் திருவிழாவுக்காகத்தானே, அப்ப முனிசிபலுக்கு எதிரா இந்த விசயத்தில கேஸ் போடுறதெண்டால் அது முருகன்கோயிலுக்கு எதிராப் போட்டமாதிரித்தானே. இது கனபேருக்கு விளங்குவதில்லை. எண்டாலும் வழக்குப் போட்டவையின்ர தரப்பில இருந்து ஒருத்தர் பட்சிக்கு அதின்ர நியாயப்பாடுகளை அடுக்கினவர். அதில ஒரு விசயம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒண்டுதான்.

'போனமுறை நல்லூர்த் திருவிழாவில கோயில் றோட்டில இருந்து ஆதீனத்துக்கு போற பக்கமா இருந்த வீதித்தடையில சப்பறத் திருவிழாவில பெரும் சனங்கள் போய்வர ஏலாமல் நெருக்குப்பட்டு, மயங்கி விழுகிற நிலைமையும் வந்தது. பருத்தித்துறை றோட் பக்கத்தை முழுக்க அடைச்சுப்போட்டு, ஆனப் பந்திப்பக்கமா மட்டும்தான் சனம் போய் வரலாமெண்டு முனிசிபல்காரர் சட்டம் போட்ட தாலதான் சனங்கள் அப்பிடிக் கஷ்டப் பட்டதுகள். அப்பிடி முனிசிபல்காரர் தன்னிச்சையா இனிமேல் நடக்கக்கூடா தெண்டதுக்காகத்தான் இப்பிடியொரு வழக்குப் போட்டிருக்கு. மற்றப்படி முருகன் வெளிவீதி சுத்தேக்க வாகனத் தோடையும், செருப்போ டையும் போறதுக்கு உந்த வழக்குப் போடேலை. நாங்களும் நல்லூ ரான்ர தீவிர பக்தர்கள் தான்' எண்டு அவை மூச்சுமுட்ட சொல்லிச்சினம்.

நாரதர் கலகம் நன்மையில முடியுமெண்டுவினம். அப்பிடி இந்தக் கேஸும் நல்லதா முடிஞ்சா சந்தோசம்தான். அதைவிட்டிட்டு, முனிசிபலோட மிண்டுறம் எண்டிட்டு முருகன்ர புனிதத்தில கைவச்சால் சிக்கல்தான். இன்டைக்கு கேஸ் நடக்குது. பாப்பம், என்ன முடிவு வரப்போகுதெண்டு.



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## சின்னம் சூட்டும் நிகழ்வு

கிளிநொச்சி, ஜூலை 1
முழங்காவில் ஆரம்ப வித்தியாலயத்தில் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு, அதிபர் பா.சதீஸ் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்துகொண்டனர். (ப-159)

வலைப்பந்தில்

## முக்கொம்பன் ம.வித்தி மாகாணத்துக்குத் தெரிவு

கிளிநொச்சி, ஜூலை 1
தெற்கு வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் கிளிநொச்சி முக்கொம்பன் மகா வித்தியாலய இரண்டு அணிகள் வலைப்பந்தாட்டப் போட்டியில் வென்று மாகாண மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.
20 வயதுப் பிரிவு முதலாம் இடத்தையும் 16 வயதுப் பிரிவு இரண்டாம் இடத்தையும் பெற்று, மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. (ச-13)

## வருடாந்த நாடக விழா

யாழ்ப்பாணம், ஜூலை 1
மானிப்பாய் இந்துக்கல்லூரியின் இல்லங்களுக்கிடையிலான வருடாந்த நாடகவிழா நிகழ்வுகள், கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க்கிழமையும் மாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளன.
கல்லூரி அதிபர் செ.இளங்கோ தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக செயற்றிறன் அரங்க இயக்குநர் கலாநிதி தே.தேவானந்தும், சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ப.கணேசன், ஓய்வுநிலை உபஅதிபர் நா.பாலகிருஷ்ணன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-66)

## நூற்றாண்டு விழா

கொடிகாமம், ஜூலை 1
நாதஸ்வர மேதை இசைப் பேறறிஞர் கலாநிதி எம்.பஞ்சாபிகேசனின் நூற்றாண்டு விழா, மருத்துவர் சு.சி.அருளானந்தம் தலைமையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில், இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சி.சிறிசற்குணராஜா கலந்து கொள்ளவுள்ளார். (எ-22,159)

## மலர் வெளியீடு

கொடிகாமம், ஜூலை 1
கைதடி சைவ ஐக்கிய சங்கத்தின் நூற்றாண்டு விழா கைதடி தெற்கு இணுங்கித் தோட்ட அன்னை இரத்தினமணி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.
நூற்றாண்டு மலர் வெளியீட்டையும் ஆய்வையும் பளை மத்திய கல்லூரி ஆசிரியர் மு.பத்மறூபன் நிகழ்த்தினார். அறிமுகவுரையை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளரும், நூலாசிரியருமான அ.லோகநாதன் நிகழ்த்தினார். சங்கதலைவர் நூலின் முதற்பிரதியை பிரதம விருந்தினரிடம் வழங்கினார்.
நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடாதிபதி ச.பத்மநாபனும், சிறப்பு விருந்தினர்களாக கைதடி முத்துக்குமாரசாமி மகளிர் வித்தியாலய அதிபர் நீ.ஜெயரூபன், கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் நா.கருணாகரன், கைதடி குருசாமி வித்தியாலயத்தின் உப அதிபர் திருமதி ந.சிவமணி ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-22,159)



## கிளி. முழங்காவில் ம.வி. கிரிக்கெட்டில் சம்பியன்

கிளிநொச்சி, ஜூலை 1
கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலய 20 வயதுக்குட்பட்ட ஆண்கள் அணி வலயமட்ட கிரிக்கெட் போட்டியில் முதலாம் இடத்தைப்பெற்றுச் சம்பியனானது.
கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கிளிநொச்சி இந்துக் கல்லூரியுடன் மோதி வெற்றிபெற்றுள்ளது.
முதலில் துடுப்பெடுத்தாடிய இந்துக்கல்லூரி அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் 40 ஓட்டங்களைப் பெற்றது. இரண்டாவதாக துடுப்பெடுத்தாடிய முழங்காவில் மகாவித்தியாலய அணி 41 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. (ச-159)

## திருடப்பட்ட மோ.சைக்கிள் பொலிஸாரால் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 1
சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலை கிழக்குப் பகுதியில் காணாமற்போன மோட்டார் சைக்கிள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.
வீடொன்றில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தபோது மோட்டார் சைக்கிள் திருடப்பட்டிருந்தமை தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.
முறைப்பாட்டுக்கமைய சாவகச்சேரி பொலிஸ் விசேட குற்றத்தடுப்புப் பிரிவினர், மோட்டார் சைக்கிள் காணாமற்போன பகுதியிலிருந்து சுமார் இரண்டு கிலோ மீற்றர்கள் தொலைவிலுள்ள அல்லாரைப் பகுதியில் மோட்டார் சைக்கிளை மீட்டனர். மோட்டார் சைக்கிளைத் திருடிய குற்றச்சாட்டில் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டார்.
சந்தேகநபரை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்திய போது, அவரை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ச-27)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். புதிய முயற்சிகளில் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடவும். உடல் நலனில் கவனம் தேவை. எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டாகும். அனுசரித்துச் செல்வது நல்லது.

**இடபம்:** பணவரவு உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சுபச் செலவுகள் ஏற்படும். மகாலட்சுமி வழிபாடு அதிர்ஷ்ட வாய்ப்புகளை ஏற்படுத்தும்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். செலவுகள் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். காரியம் அனுகூலமாகும். சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படும்.

**கடகம்:** முயற்சிகளில் வெற்றி உண்டாகும். பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. பிள்ளைகளால் சங்கடங்கள் ஏற்படும். சிவவழிபாடு காரியங்களை அனுகூலமாக்கும்.

**சிம்மம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைக்கும். செலவுகள் ஏற்படும். பணிச்சுமையின் காரணமாக உடல் அசதி ஏற்படக்கூடும். அம்பிகையை வழிபட பல வகைகளிலும் அனுகூலப் பலன்கள் ஏற்படும்.

**கன்னி:** மனதில் அவ்வப்போது சஞ்சலம் ஏற்படும். அலைச்சலும் சோர்வும் ஏற்படும். உறவினர்களால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவுமிருக்காது. மனவருத்தங்கள் நீங்கும்.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு ஏற்றநாள். மகிழ்ச்சியுடன் செலவும் உண்டாகும். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள் . நன்மைகள் கூடும். செலவுகளில் திட்டமிடுதல் அவசியம்.

**விருச்சிகம் :** உற்சாகமான நாள். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். முருகப்பெருமானை வழிபட மகிழ்ச்சி அதிகரிக்கும். செலவு செய்வீர்கள். வீண் பிரச்சினைகளும் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். தேவையான பணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படும், சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும். செலவுகள் ஏற்படும்.

**மகரம்:** முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் மிகுந்த கவனத்துடன் ஈடுபடவும். மற்றவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடவேண்டாம். எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படும்.

**கும்பம்:** எதிர்பார்த்த காரியம் சற்று இழுபறிக்குப் பின்னர் முடிந்துவிடும். எதிர்பாராத செலவு ஏற்படும். நரசிம்மரை வழிபடுவதன் மூலம் இடையூறுகள் விலகும். மனஸ்தாபம் ஏற்படும். பொறுமை அவசியம்.

**மீனம்:** அனுகூலமான நாள். எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைக்கும். ஆதாயம் ஏற்படக்கூடும். முருகப்பெருமானை வழிபட மகிழ்ச்சி அதிகரிக்கும்.வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிட விற்பனை குறைவாகவே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## கடன்கொண்டான் நெஞ்சம்; கலங்குதலும் ஆனந்தமும்

'...கடன் கொண்ட நெஞ்சம் போலும்
கலங்கினான் இலங்கை வேந்தன்'

என்று இராவணனின் கையறு நிலையை 'இராமாயணக் கீர்த்தனைகளில் சொல்லியிருந்தார் அருணாசலக் கவிராயர். அந்தக் காலத்தில் கடன்படுதல் என்பது தனிமனிதனொருவனின் ஆளுமைக்கு இழுக்கான விடயமாக நோக்கப்பட்டது. அவ்வாறு கடன் வாங்கியவர்கள் உரியகாலத்தில் கடனைக் கொடுக்காவிட்டால், கடன் கொடுத்தவர்கள் இறுதியாக ஒருகாரியம் செய்வார்கள். கடனாளியை ஏதேனும் பொது இடத்தில் கண்டால், அங்கேயே அவரைச் சுற்றி ஒருவட்டம் போட்டுவிட்டுப் போய்விடுவார்கள். 'கடனை முழுவதுமாகச் செலுத்திவிட்டு இந்த வட்டத்தை விட்டு வெளியே போ' என்பது அதன் அர்த்தம். அவ்வாறு வட்டமிடுதல் என்பது ஒருவர் உயிரோடு இருந்தும் இல்லாதவன்போல தன் மதிப்பை சமூகத்தில் இழந்தே வாழ வேண்டியிருக்கும். எனவே அவ்வாறு தன்னைச் சுற்றிக் கடன் தந்தவர் வட்டமிடக்கூடாது என்பதற்காக கடன் பட்டவர்கள் எப்போதுமே கடனைச் செலுத்தும் வழி பற்றி யோசித்து கலங்குவார்கள். அதைத்தான் அருணாசலக் கவிராயர் இலங்கைவேந்தன் இராவணனின் மனநிலைக்கு உவமித்தார்...

கிட்டத்தட்ட இதேநிலைக்கு இலங்கையும் சென்றிருந்தது. கடந்த பல தசாப்தங்களாக தமிழ் மக்களுக்கு எதிரான போருக்காக சிங்களப் பேரினவாத அரசு உலகெங்கும் கடன்களை வாங்கிக் குவித்திருந்தது. பணமாக மட்டுமல்லாமல் ஆயுதங்களாகவும் இந்தக் கடன்சுமை இலங்கையின் மீது திணிக்கப்பட்டது. போர் முடியும் வரை தாம் வழங்கிய கடனைப் பற்றி மூச்சும் காட்டாதிருந்த நாடுகள் எல்லாம், போருக்குப் பின்னர் 'வட்டியோடு கடனைத்தா' என்று இலங்கையின் கழுத்தைப் பிடித்தன. அத்தோடு கொரோனாப் பெருந்தொற்று எஞ்சிக்கிடந்த பொருளாதாரத்தையும் வழித்துத்துடைத்துவிட, இலங்கை வாங்கிய கடனைச் செலுத்தமுடியாமல் வங்குரோத்தடைந்த நாடாக மாறியது. பொருளாதாரம் ஈடாடியதால், நாடும் ஆடத் தொடங்கியது. 'அரகலய' என்ற மக்கள் எழுச்சி, ஆட்சியாளர்களை ஓடவைத்தது. ஒற்றை ஆசனத்தோடு வந்த ரணிலுக்கு அதிகார மகுடம் சூட்டப்பட்டது. அவரும் 'இனி இழப்பதற்கு ஏதுமில்லை' என்ற கட்டத்தில் இருந்ததால், கண்ணை மூடிக்கொண்டு கடன்களை வாங்கிக் குவிக்கத் தொடங்கினார். இப்போது இரவல் சேலையில் கொய்யகத்தை நன்றாகக் கட்டிக்காட்டுகின்றது ரணில் அரசாங்கம். ஏற்றுமதிகள் எதுவும் முன்னேறவில்லை, உள்ளூர் உற்பத்தியும் பெருகவில்லை. ஆனால், இலங்கையின் பொருளாதாரம் மட்டும் ஸ்திரமாகிவிட்டது என்று இலங்கை அரசாங்கம் சொல்வதை மனநலப் பிறழ்வுள்ளவர்கள்கூட நம்பமாட்டார்களே?

வெளிப்பார்வைக்கு எல்லாமே நல்லவிதமாக நடந்து கொண்டிருப்பதாக இருந்தாலும், புற்றுநோய்போல இலங்கையின் பொருளாதாரத்தை கடன் என்ற கிருமி மோசமாக அரித்தபடியேதான் இருக்கின்றது. இப்போது வாங்கிய கடன்களை எல்லாம் 2033ஆம் ஆண்டுக்குள் செலுத்தி முடிக்கவேண்டும். அதற்காக 2028ஆம் ஆண்டில் இருந்தே கட்டம்கட்டமாக அந்தக்கடன் தொகையை மீளச் செலுத்த ஆரம்பிக்கவேண்டும். அதனால் இந்த நான்கு வருடங்களும் இலங்கை பொருளாதாரத்தில் மீண்டுவிட்டது போன்ற விம்பமே தோன்றும். ஆனால், 2028க்குப் பின்னர் காட்சி தலைகீழாகும். இப்போதிருப்பதைவிட, கோத்தாபய பதவிக் காலத்தைவிட, மிக மோசமான பொருளாதாரச் சீரழிவொன்றை நாடு சந்திக்கவேண்டியிருக்கும். கடன் வாங்கி, தாம் தூம் என்று செலவுசெய்து ஒரு கொண்டாட்டத்தைச் செய்தால் 'அவன் பணக்காரன்' என்றுதான் எல்லோரும் எண்ணுவார்கள். ஆனால், அந்தக் கடனைக் கட்டாமல், வேலைக்கும் போகாமல் இருந்தால் கடைசியில் கொண்டாட்டத்துக்காக வாங்கிய கடன் அந்தக் குடும்பத்தையே ஒட்டாண்டிகளாக்கி நடுவீதிக்கு துரத்திவிடும், இலங்கையும் இப்போது அப்படித்தான். நாடு நன்றாக இருப்பதுபோல தோற்றமளிக்கும் இந்தக்காலத்தில் ஜனாதிபதிக் கதிரையை இன்னொருமுறை ஸ்பரிசிக்க ரணில் ஆசைப்படுகிறார். அதற்காக அவர் இன்னுமின்னும் கடன்களை வாங்கவும் தயார். ஏனெனில் அடுத்தமுறை கடன் கொடுத்த நாடுகள் இலங்கையின் கழுத்தைப் பிடிக்கும் போது, ரணில் பதவியை விட்டுப் போய்விடுவார். புதிதாக ஆட்சிக்கு வருபவர்களே விழிபிதுங்கவேண்டியிருக்கும். இவற்றை வெளியே சொல்லாமல் கடன் மறுசீரமைப்புக்கு சீனா இணங்கியதையும், சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்த கட்டக் கடன் கிடைக்கவுள்ளதையும் பெருவெற்றிபோல கொண்டாடி மகிழ்கிறது அரசாங்கம். கடன்பட்டார் நெஞ்சம் இராவணன் காலத்தில் கலங்கியது, இப்போது கடன்பட்டார் நெஞ்சம் ஆனந்தத்தில் துள்ளிக்குதிக்கிறது...!




சர்வதேச ரீதியில் அச்சுறுத்தல்

# பொலிஸ் பிரிவுகளை உருவாக்க ஐ.நா.விடம் இலங்கை கோரிக்கை



**கொழும்பு, ஜூலை 1**

**சர்வதேச ரீதியாக அதிகரித்துவரும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்த்துப் போராடுவதற்கு ஐக்கிய நாடுகள் சபை சிறப்புப் பொலிஸ் பிரிவுகளை உருவாக்கவேண்டும் என்று பொதுப்பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.**

அண்மையில் நடைபெற்ற ஐ.நா. பொலிஸ்மா அதிபர்கள் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் கும்பல்களின் வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. இந்தநிலைமை சர்வதேச அமைதிக்கு தீங்கு விளைவிக்கும் தாக்கத்தை வெளிப்படுத்துவதாகவுள்ளது.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் கும்பல் வன்முறைகளால் அதிகரித்துவரும் அச்சுறுத்தலை சமாளிக்க விசேட பொலிஸ் பிரிவுகளை உருவாக்கி நிலைநிறுத்துவது தொடர்பில் ஐக்கிய நாடுகள் பரிசீலனை செய்ய வேண்டும்.

அத்தகைய அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதில் அனுபவம் வாய்ந்த பொலிஸ் அதிகாரிகள் குற்றவியல் நீதித்துறை வல்லுநர்களுக்கு பங்களிக்க எமது நாடு தயாராக இருக்கிறது - என்றார். (எ-இ)

## குறைகிறது மின்கட்டணம்

மின் கட்டண விலைத் திருத்தத்தில் மேற்கொள்ளப்படும் மாற்றம் தொடர்பான இறுதித் தீர்மானம் ஜூலை 15 ஆம் திகதி மேற்கொள்ளப்படும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். இந் நிலையில் எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் மின்கட்டணத்தைக் குறைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை – மின்கட்டணக் குறைப்புத் தொடர்பாக மக்கள் எழுத்து மூலம் யோசனைகளை முன்வைக்கும் காலம் இந்த மாதம் 8 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-66)

## தேர்தல் பரப்புரைக்கு தயாராகும் தம்மிக்க

கொழும்பு. ஜூலை 1



பிரபல வர்த்தகரான தம்மிக்க பெரேரா எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிடுவதற்காக தனது பரப்புரைப் பணிகளை ஆரம்பிக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்தமாதம் அவர் அதிகாரபூர்வமாக பரப்புரையை ஆரம்பிக்கவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை எதிர்க்கட்சியில் இருந்து அரசுபக்கம் இணையப் போவதாகக் கூறியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒன்றிணைக்காவிட்டால் ஜனாதிபதித் தேர்தலுக்கு ஆதரவு வழங்க முடியாது என பொதுஜன பெரமுனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## பதில் சட்டமா அதிபராக ரணசிங்க

பதில் சட்டமா அதிபராக சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பரிந்த ரணசிங்க இன்று நியமிக்கப்படவுள்ளார். சட்டமா அதிபர் சஞ்சய ராஜரத்தினம் இந்த வாரம் ஓய்வு பெறுவதால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கே அவர் நியமிக்கப்படுகிறார். சட்டமா அதிபர் பதவிக்கு பரிந்த ரணசிங்கவை நியமிப்பதற்கான ஒப்புதலுக்காக அவரின் பெயர் அரசமைப்பு பேரவையில் பரிந்துரைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-66)

## திறைசேரி உண்டியல்கள் ஏல விற்பனை

ஒரு இலட்சத்து 90 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் எதிர்வரும் 3ஆம் திகதி ஏல விற்பனை ஊடாக வழங்கப்படவுள்ளன என்று இலங்கை மத்தியவங்கி அறிவித்துள்ளது. (எ-இ)

**நாளை**

02.07.2024

**செவ்வாய்க்கிழமை**

**ஆனி - 18**

சுபநேரம் : 10.26 - 11.56

ராகுகாலம் : 02.56 - 04.26

ஏகாதசி விரதம்

**நாளொரு நல்வார்த்தை**

**ஒவ்வொருவரும் உலகத்தை மாற்ற நினைக்கிறார்களேயொழிய தம்மை மாற்றிக்கொள்ள நினைப்பதில்லை.**

-ஆபிரஹாம் லிங்கன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனைகளின் உணவில் மாற்றம்

கொழும்பு, ஜூலை 01
அரச மருத்துவமனைகளில் நோயாளர்களுக்கு வழங்கப்படும் உணவில் மாற்றம் செய்யப்படவுள்ளது என்று இலங்கை போஷாக்கு நிபுணர்கள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்துக்காக அரசாங்கத்தால் வழங்கப்படும் நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க சுகாதார செயலாளர் உறுதியளித்துள்ளார்.

அரச மருத்துவமனைகளில் நோயாளர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம் மற்றும் வீண்விரயத்தைக் குறைத்தல் என்பனவற்றின் அடிப்படையில் உணவுமுறையில் மாற்றத்தை ஏற்படுத்த இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனை நோயாளர்களுக்கு வழங்கப்படும் உணவை மாற்றியமைக்கும் செயற்றிட்டத்தின் முதல் கட்டம் மஹரகம மருத்துவமனையில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# வடக்கின் மீள் எழுச்சிக்கு ஜப்பான் துறைசார் அறிவு

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 1

**மிகப்பெரிய அழிவிலிருந்து ஜப்பான் மீண்டெழுந்து வரக் காரணமாகிய துறைசார் அறிவு, வடக்கின் மீள் எழுச்சித் திட்டங்களுக்கும் பயன்படுத்தப்படவேண்டும். இதற்கென ஜப்பான் நாட்டிலிருந்து துறைசார் அனுபவமிக்க தொண்டர்கள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் இலங்கைக்கு வரவழைக்கப்படுவர் என்று வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.**

ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகவர் நிலைய தொண்டர் அமைப்பின் பிரதிநிதிகளுக்கும், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸுக்கும் இடையிலான விசேட சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்றது. ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகவர் நிலையத்தின் தொண்டர்களை வரவழைத்து முன்னெடுக்கவுள்ள திட்டங்களைத் தெளிவுபடுத்தும் வகையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது ஜப்பானின் தொழில்நுட்ப அறிவு , திறன் அபிவிருத்தி, மனிதவள முகாமைத்துவம் உள்ளிட்ட விடயங்களில் அதிக கவனம் செலுத்தப்பட்டன.

விவசாயம், கல்வி, டிஜிற்றல் பொருளாதாரம், சுற்றுலாத்துறை அபிவிருத்தி, நிதி முகாமைத்துவம், ஊட்டச்சத்துத் திட்டங்கள், விசேட தேவையுடையோருக்கான கல்வி உள்ளிட்ட விடயங்களில் புதிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று ஆளுநர் குறிப்பிட்டார். (ச-26,27,125)

# மின்சார ஊழியருக்கு கொடுப்பனவுத் திட்டம்



கொழும்பு, ஜூலை 01
இலங்கை மின்சாரசபை ஊழியர்களுக்கு புதிய சம்பள அமைப்பு, செயற்றிறன் அடிப்படையிலான ஊக்குவிப்புத் தொகை மற்றும் பதவி உயர்வு தொடர்பில் புதிய முறையொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

மின்சாரசபைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் வகையில் ஊழியர் பட்டியல் திருத்தப்படவுள்ளது.

மின்சாரசபையின் சீர்திருத்தங்களின் கட்டமைப்பு, பல்வேறு பணிகளை நடைமுறைப்படுத்தும் நேரம், வருகை உள்ளிட்டவை குறித்து தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் மின்சக்தி அமைச்சர் குறிப்பிட்டார். (ச-இ)



தீவக கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற பெண்களுக்கான மென்பந்துத் துடுப்பாட்டப் போட்டியில் அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயம் ஒன்பதாவது தடவையாகவும் சம்பியனைத் தனதாக்கியது. (ச-25-9)

# கட்டுநாயக்க அபிவிருத்தி; கைகொடுக்கும் ஜப்பான்

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஜப்பான் முன்வந்துள்ளது.

அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு கொழும்பில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய உதவுவதாக ஜப்பானிய பதில் தூதுவர் கற்சுகி கொறடோ தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டு இறுதியில் இலங்கையின் ஜப்பானுக்கான கடன் நிலுவை 2.67 பில்லியன் டொலர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-25-6)




# அமெரிக்க மிஷனில் கணிதக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 01
உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியின் கணிதக் கண்காட்சி, பாடசாலையின் அதிபர் சோ.புஸ்பாகரன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் வடமராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் த.சுஜீகரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (ப-66)

# வெளிநாட்டுக்கடன் 37 பில்லியன் டொலர்

கடந்த மார்ச் மாதம் வரையில் இலங்கையின் மொத்த வெளிநாட்டுக்கடன் 37 பில்லியன் டொலர் என திறைசேரி தெரிவித்துள்ளது.

இதில் கூடுதலான கடன் வழங்கிய நாடுகளின் பட்டியலில் சீன 10.58 பில்லியன் டொலரையும் ஜப்பான் 2.35 பில்லியன் டொலரையும் இந்தியா 1.36 பில்லியன் டொலரையும் கடனாக வழங்கியுள்ளது என்றும் திறைசேரி தெரிவித்துள்ளது. (ச-22-6)

# புத்துவெட்டுவானில் சட்டவிரோத காடழிப்பு

## ஒருவர் சிக்கினார்!


முல்லைத்தீவு, ஜூலை 01
முல்லைத்தீவு, புத்துவெட்டுவானில் சட்டவிரோதமாகக் காடுகளை வெட்டியவர்களில் ஒருவர் வனவளத்திணைக்கள அதிகாரிகளால் மடக்கிப் பிடித்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மருதங்குளம் - வேப்பங்குளம் பகுதியில் 10 ஏக்கர் வரையான காடு சட்டவிரோதமாக அழிக்கப்படுகிறது எனக் கிடைத்த தகவலுக்கமைய, கிராம அலுவலரின் துணையோடு இந்தக் கைது இடம்பெற்றது.

இதன்போது தப்பித்தவர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகளை வனவளத்திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். (ப-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்த்தகச் சந்தை



கிளிநொச்சி, ஜுலை 01
கைத்தொழில் அமைச்சின் கீழான, கிளிநொச்சி மாவட்ட விதாதாவள நிலையத்தின் ஏற்பாட்டில், 2024 ஆம் ஆண்டுக்கான மாபெரும் வர்த்தகச் சந்தை, கிளிநொச்சியில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது.

பழைய கச்சேரி வளாகத்தில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட பதில் செயலர் எஸ். முரளிதரன், மேலதிக மாவட்டச் செயலர், திட்டமிடல் பணிப்பாளர், உள்ளகக் கணக்காய்வாளர், உதவி மாவட்டச் செயலர், பதில் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர், மாவட்ட விதாதாவள உத்தியோகத்தர், பிரதேச செயலகங்களின் விதாதாவள உத்தியோகத்தர்கள், உள்ளூர் உற்பத்தியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-113)





சண்டிலிப்பாய் பிரதேச கலாசாரப் பிரிவின் ஏற்பாட்டில், யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத் தொற்று நோயியல் மையம் மற்றும் குடும்பநலச் சுகாதார நிலையம் ஆகியவைஇணைந்து மாணவர்களுக்கான உடல், உள ஆரோக்கியம் தொடர்பில் விழிப்புணர்வுச் செயலமர்வை யாழ்.மாதகல் சென்.ஜோசப் மகாவித்தியாலய மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தின. (ச-25-66)




சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினரின் ஏற்பாட்டில், ஞானச்சுடர் சஞ்சிகையின் ஆனி மாத 318 ஆவது இதழ் வெளியீட்டு நிகழ்வு, சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் தலைவரும், ஓய்வுநிலை அதிபருமான ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஆசிரியர் சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல், சைவப் புலவர் க.கைலைநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-66)





கிளிநொச்சி மாவட்டத்தின் கல்மடுக்குளத்தின் 93 ஆவது ஆண்டு விழாவும், அப்பகுதியில் அமர்ந்து அடியார்களைக் காத்தருளும் நெல்முத்து விநாயகப் பெருமானுக்கு 93 வருடங்களின் பின்னர் புதிதாக அமைக்கப்பட்ட ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவும் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன. (ப-113)



குப்பிழான்தெற்கு வீரமனை கன்னிமார் கௌரியம்பாள் ஆலயத்தின் கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு சங்காபிஷேக உற்சவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. 1008 சங்காபிஷேகம்,வசந்த மண்டபப் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து அடியவர்கள் புடைசூழ அம்பாள் உள்வீதி, வெளிவீதி உலா வந்தார். (ச-66)

## நூல் வெளியீடு



கவிஞர் பிரியநிலாவின் 'உனக்கென்ன வேணும் சொல்லு' எனும் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு, ஓமந்தை மத்திய கல்லூரியில் எழுத்தாளர் தமிழ்மணி அகளங்கன் தலைமையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் கலாநிதி வரதகுமார், ஓமந்தை மருதோடை முருகன் ஆலயப் பூசகரும் தற்போது கனடாவை வசிப்பிடமாகக் கொண்டவருமான உதயகுமாரஜயா, கற்சிலைமடு அ.த.க. பாடசாலை அதிபர் கம்பீரக்குரலோன் சின்னப்பா நாகேந்திரராசா, கலைஞர்கள், இலக்கிய ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப)

2024 ஆம் ஆண்டு முதல் 2030 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்கான போஷாக்குத் தொடர்பான பல்துறைசார் செயற்றிட்டத்தை உருவாக்குவதற்கான திறன் மேம்பாட்டு நிகழ்ச்சி, உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் பல்துறைசார்ந்த அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக மட்டத்தைப்பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-66)







மை டியர் அக்கடமி மற்றும் டி.பி.எடியுகேஷன் ஐ.ரி.கம்பஸ் ஆகியன இணைந்து, யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னெடுத்த, கோடிங் கற்கை நெறிகளைக் கற்ற மாணவர்களுக்கான தரச்சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு, முற்றவெளி அரங்கில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் டி.பி.எடியுகேஷன் நிறுவன ஸ்தாபகரும், தலைவருமான நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா, மை டியர் அக்கடமி நிறுவுநரும், நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடீரெனப் பற்றிய தீ; எரிந்து நாசமான வீடு!



கிளிநொச்சி, கண்டாவளை - கண்ணகி நகரில் திடீரெனப் பற்றிய தீயால் வீடொன்று எரிந்து நாசமானது. தீப்பற்றிய சமயத்தில் வீட்டுக்குள் குழந்தையொன்று தொட்டிலில் உறங்கிக் கொண்டிருந்தபோதும், தாயார் விரைந்து செயற்பட்டமையால் அந்தக் குழந்தை தெய்வாதீனமாகப் பாதிப்பு எதுவுமின்றித் தப்பியது.

குறித்த சம்பவம் நேற்று ஞாயிற்றுக் கிழமை நண்பகல் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் இருந்த பெண், நேற்று மதியம் சமையலில் ஈடுபட்டிருந்தார். அப்போது அவர் வெளியில் வந்து மீனை வெட்டிச் சுத்தப்படுத்திக்கொண்டிருந்த பொழுது, திடீரென வீடு தீப்பற்றி எரிவதை அவதானித்துள்ளார், உடனடியாக விரைந்து செயற்பட்ட அவர் வீட்டினுள் நுழைந்து, அங்கு தொட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த பிள்ளையைத் தூக்கிக் கொண்டு வெளியே ஓடிச் சென்றார். பின்னர் அயலவர்களுக்கு அவர் தீவிபத்துக் குறித்துத் தகவல் தெரிவித்தார். அயலவர்கள் அந்த வீட்டில் பற்றிய தீயை அணைக்க முயன்றபோதும், அந்த முயற்சி பயனளிக்கவில்லை. வீடு தீயில் முற்றாக எரிந்து நாசமானது.

50 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமான பணம், தொலைபேசி, மீன்பிடி வலைகள்,உடுபுடைவைகள், வீட்டு உபகரணங்கள் உள்ளிட்ட பொருள்களும் தீயில் கருகின.

அரச நிதியுதவியின் கீழ் அமைக்கப்பட்டு வரும் வீட்டின் பணிகள் பூர்த்தியாகாததால், குறித்த குடும்பம் தற்காலிக வீட்டிலேயே வசித்து வந்த நிலையில் இந்தத் தீவிபத்து நடந்துள்ளது.

தற்காலிக வீடும் எரிந்துபோனதால், அயலவர்களின் வீட்டிலேயே அந்தப்பெண்ணின் குடும்பம் தற்போது தங்கியுள்ளது.

(அ-113)

## மரண அறிவித்தல்

### லதா நித்தியானந்தன்



தோற்றம் 17.08.1958 — மறைவு 29.06.2024

யாழ்ப்பாணம் நீர்வேலியை பிறப்பிட மாகவும் இலண்டனை வசிப்பிடமாக வும் கொண்ட லதா நித்தியானந்தன் அவர்கள் 29.06.2024 அன்று இறைபதம் அடைந்தார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ள வும்.

**தகவல்:**
**ராஜசேகர் குடும்பம், நீர்வேலி**
**077 4822175**

## கேள்வி அறிவித்தல்
### சபைநிதி வேலைத்திட்டம் - 2024
### வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.

01. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பபாய் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காக கோரப்படுகின்றது.

02. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்விக்கமைய நடாத்தப்படும். எனினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016(iii) ஆம் இலக்க 2021.02.18 திகதிய மற்றும் 01/2024ஆம் இலக்க 01.03.2024 ஆம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகள் பின்பற்றப்படுவதுடன், வட மாகாணத்தை சார்ந்தவர்களுக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, யாழ் வீதி மானிப்பாய் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் 021 225 6651) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான பூரணமான கேள்வி ஆவணங்களின் தொகுதி ஒன்றை **தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, யாழ் வீதி மானிப்பாய்** எனும் முகவரியில் 01.07.2024ந் திகதியிலிருந்து 15.07.2024ந் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3,000.00 இனை (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு ஆவணங்களில் தயாரித்து **மூலஆவணம், நகல்ஆவணம் என தனித்தனி உறைகளிட்டு, தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்** எனும் முகவரிக்கு 16.07.2024ந் திகதி காலை 10.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவே அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்விப் பிணை வைப்புத்தொகையானது கீழே அட்டவணைகளில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் செலுத்தி அதன் உண்மைப்பிரதியினை கேள்வி ஆவணத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக்கூட்டம் 2024.07.09ந் திகதி வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் தலைமை அலுவலகத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்திற்கு ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளமுடியும்

10. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை தகுந்த காரணங்களுடன் நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.


| தொ.இல. | வேலை விபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டு தொகை மில்லியன் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கேள்வி செல்லுபடியாகும் காலம் | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | மானிப்பாய் சந்தை அபிவிருத்திவேலை NP/14/41(16)/W/CF/2024/16 | 2.04 | 63 நாட்கள் | C8 and C7 (கட்டடம்) | 63 நாட்கள் | 20,350.00 | 14.10.2024 |
| 02 | மானிப்பாய் கிராம உபஅலுவலகத் திருத்தம், ஆனைக்கோட்டை NP/14/41(16)/W/CF/2024/17 | 1.60 | 63 நாட்கள் | C9 and C8 (கட்டடம்) | 49 நாட்கள் | 16,000.00 | 30.09.2024 |
| 03 | மகா சனசமூகநிலைய கிளை வீதி புனரமைப்பு மானிப்பாய் மேற்கு NP/14/41(16)/W/CF/2024/18 | 1.03 | 63 நாட்கள் | C9 and C8 (வீதி) | 49 நாட்கள் | 10,400.00 | 30.09.2024 |
| 04 | i) கலையரங்கம் வீதி புனரமைப்பு சில்லாலை வடக்கு ii)ஞானவைரவர் கோவில் வீதி புனரமைப்பு, சில்லாலை வடக்கு NP/14/41(16)/W/CF/2024/19 | 1.47 | 63 நாட்கள் | C9 and C8 (வீதி) | 49 நாட்கள் | 14,700.00 | 30.09.2024 |

**தலைவர்,**
**உள்ளூராட்சி அதிகாரசபை பெறுகைக்குழு,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.**
**01.07.2024.**

([illegible]42748) ([illegible]1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 03 . 1934



மறைவு 25 . 06 . 2024

### கிருஷ்ணர் குணசிங்கம்
(Tea Factory Officer)
(வட்டவளை, பொகவந்தலாவ றின்சின்)

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் ஹட்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் குணசிங்கம் கடந்த (25.06.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும், சிவநேசன் (நோர்வே), சிவரூபன், சிவதாஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மாலதி (நோர்வே), நந்தினி, சுஜந்தா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிவேதா (நோர்வே), கஜந்தன் (நோர்வே), நிகித்தா (நோர்வே), விதுர்ஷிகா, ரித்திக் (லண்டன்), ரித்திஷ் (லண்டன்), பேரனும் குலசிங்கம், காலஞ்சென்றவர்களான புஸ்பலிங்கம், இராஜதுரை மற்றும் செல்வராணி, பரமேஸ்வரி, காலஞ்சென்ற சாம்பசிவமூர்த்தி மற்றும் மீனாட்சிதேவி, காலஞ்சென்ற நவரட்ணராஜா மற்றும் இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (03.07.2024) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் கட்டுவன் வீதி கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நீதிமன்ற வீதி,**
**மல்லாகம்**
**(நீதிமன்றம் அருகாமையில்)**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**T.P: 077 771 7918**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தொன்பதாவது நினைவஞ்சலியும் 100 ஆவது பிறந்தநாளும்

தோற்றம் 01.07.1924

மறைவு 24.04.2006



## நல்லதம்பி வீரசிங்கம்

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
பத்தொன்பது ஆண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது உங்கள் நினைவுகள்

கொழும்புத்துறை.

பிரிவால் துயருறும்
குடும்பத்தின் சார்பாக
மருமகன் கி.சிவலிங்கம்

# மரண அறிவித்தல்

பிறப்பு 09 . 11 . 1946

இறப்பு 29 . 6 . 2024



## பொன்னுத்துரை சந்திரலிங்கம்

யாழ்ப்பாணம் சீனியர்லேன், தட்டாதெரு சந்தியை பிறப்பிடமாகவும், கொழும்பு மகாவித்தியாலய மாவத்தையை வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சந்திரலிங்கம் கடந்த (29.06.2024) சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கேதீஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், சிந்துஜா, ஸ்ரீஜா (அமுதினி), ஸ்ரீசரணியா ஆகியோரின் அன்புத் தந்தையும், சஜன், சானுஜன், சதுர்ஷன், சேருஜன், அரசெழிலன், எழில்நிலவன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் நேற்று (30.06.2024) ஞாயிற்றுக்கிழமை தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இடம்பெற்றது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மேலதிக தொடர்புகளுக்கு:
077 735 9983

தகவல்:
குடும்பத்தினர்

(CS/55547 N-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 02 . 1972

மறைவு 30 . 06 . 2024



## அமரர் சோமசுந்தரம் இரஞ்சினிதேவி

(முன்னாள் அளவெட்டி மல்லாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்க கிளை முகாமையாளர்)

இன்னாவத்தை கொல்லங்கலட்டி தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் மகாத்மா வீதி அளவெட்டி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் இரஞ்சினிதேவி நேற்று (30.6.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் அமரர்களான சோமசுந்தரம்-இராசலட்சுமி தம்பதியினரின் அன்பு மகளும் இராஜினிதேவி, சிவலோகநாதன் (லண்டன்), சியாமினி (ஆசிரியர்-இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம்), சிவநேசன் (பிரான்ஸ்), அமரர் அபிமினி (போதனாசிரியர் அஞ்சல் பயிற்சிக் கல்லூரி யாழ்ப்பாணம்), ஆகியோரின் சகோதரியும் கணேசலிங்கம், புனிதவதி (லண்டன்), மாசிலாமணி, விஜிதா (பிரான்ஸ்), சதீஸ்குமார் (குறிஞ்சி களஞ்சியம் யாழ்ப்பாணம்), ஆகியோரின் மைத்துனியும், துஷாந், சேதுஷன், டக்ஷி ஆகியோரின் பெரியம்மாவும் திசானி, சிவானிக்கா ஆகியோரின் அத்தையும் அன்னலட்சுமி, சீதாலட்சுமி, விஜியலட்சுமி, திலகவதி ஆகியோரின் பொறாமகளும் வரதராசாவின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.07.2024) திங்கட்கிழமை காலை 9.00 மணி அளவில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

076 611 1244, 077 482 0733

ஈழத்தின் மூத்த எழுத்தாளர் வரதர் வெளியீடு
நிறுவன சாதனையாளர்
“சாகித்திய இரத்தினம்”


## அமரர் தி.ச.வரதராசன் (வரதர்)

அவர்களின்

# பிறந்த நூற்றாண்டு நினைவு

தோற்றம் 01 . 07 . 1924

மறைவு 21 . 12 . 2006



என் தந்தை
அன்பும், ஆளுமையும்,
கண்ணியமும், கட்டுப்பாடும்
கொண்ட கடும் உழைப்பாளி.
எடுக்கும் செயல்களை சிறப்பாக
சாதித்தவர்
என்னையும் ஓர் இளவரசி போன்று
வளர்த்து ஆளாக்கிய தெய்வம்
என்றென்றும் எங்கள் மனதில்
நீங்காது வாழ்பவர்.
- செந்தாமரை

தாயின்
கருணையுடன்
தந்தையாக
அறிவையும்
தரணியில் தந்தவர்
தங்கமான என் அப்பா
- தேன்மொழி

அப்பா 100
நூற்றாண்டு நாளிது.
அப்பாவின்
நூல்கள் படைத்தது
நேற்றாயிருந்தது
காற்றாக காலம் கடந்தாலும்
கருத்துகள், கல்மேல்
எழுத்தாயிற்று
- மலர்விழி

பிள்ளைகள்

(CS/55496) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டைப் பாதுகாக்க முன்வாருங்கள்!

## எதிர்க்கட்சிகளுக்கு ரணில் அழைப்பு

**கொழும்பு, ஜுலை 1**

**“பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பாதுகாக்கப்படவேண்டும்.**

எனவே, இணைந்து செயற்படுமாறு எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கின்றேன்.” - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அமைச்சர் காஞ்சன விஜயசேகரவின் ஏற்பாட்டில் மாத்தறையில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இக்கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசியல்வாதிகள் ஒன்றாக மேடையேறி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்போது உரையாற்றிய ஜனாதிபதி மேலும் கூறியவை வருமாறு.

“ கட்சிபேதமின்றி நாம் அனைவரும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டிய தருணம். எனவே, எம்முடன் இணையுமாறு எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன். என்னிடமிருந்து பாடங்களையும் கற்றுக்கொள்ளலாம். எதிர்காலத்தில் தலைமைத்துவத்தை பொறுப்பேற்கலாம். குறைகூறிக்கொண்டிருப்பதில் பயன் இல்லை.

அரசியலை மாற்றியமைக்க ஒன்றுபடுவோம். இதுவரை முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் பாதுகாக்கப்படவேண்டும். அதற்காக அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும். கட்சி, தனிநபர்களைவிட நாடுதான் எமக்கு முக்கியம். உரிய வகையில் தேர்தல்கள் நடத்தப்படும். ‘டைட்டானிக்’ கப்பலையே என்னிடம் கையளித்தனர். அந்தக் கப்பலை நான் தற்போது துறைமுகத்துக்கு கொண்டுவந்துள்ளேன்.

பனிப்பாறைகளுக்கு பயந்து மாலுமிகள் எல்லாம் தப்பியோடினர். எவரும் இருக்கவில்லை. வாழ்வா, சாவா என்ற இக்கட்டான நிலைமையே காணப்பட்டது. கடலில் மூழ்கி மரணிப்பதா? கரைசேர்வதா என்ற நிலை காணப்பட்டபோதும் கப்பலை துறைமுகத்துக்குக் கொண்டு வந்துள்ளேன். எனவே, அந்தக் கப்பலை புனரமைத்து இன்னும் 50, 100 வருடங்களுக்கு பயணிப்பதா ? தப்பியோடிய மாலுமிகளிடம் ஒப்படைப்பதா ? என மக்கள் தீர்மானிக்க வேண்டும்.” - என்றார். (அ-44)



# எரிபொருள் விலை குறைப்பு!

கொழும்பு, ஜுலை 1

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள்களின் விலையை நேற்று நள்ளிரவு முதல் குறைத்துள்ளது. ஒக்ரேன் 92 ரகப் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 11 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலையாக 344 ரூபாவாகவும், ஒக்ரேன் 95 ரகப் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 41 ரூபாவால் குறைக்கப்பட்டு 379 ரூபாவாகவும் , சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 22 ரூபாவால் குறைக்கப்பட்டு 355 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனினும், மண்ணெண்ணெய் உள்ளிட்ட ஏனைய எரிபொருள்களின் விலைகளில் மாற்றம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. (அ-26-66)

# தீக்காயத்தால் ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், ஜுலை 1

தீக்காயங்களுக்குள்ளாகி, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தவரும், ஈ.பி.டி.பி.கட்சியைச் சேர்ந்தவருமான சரவணபவானந்தன் சிவகுமார் (பவானி) நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணியளவில் உயிரிழந்தார்.

கடந்த 20 ஆம் திகதி அன்று இரவு 9 மணியளவில் வத்திராயன் வடக்கு வேம்படி பகுதியில் உள்ள தனது மீனவர் வாடியில் தனிமையில் உறங்கிக் கொண்டிருந்தபோது தீக்காயங்களுக்குள்ளானார்.

படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு அவர் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-100)

# தங்கத்துடன் வந்த யாழ்.வாசி கைது

கொழும்பு, ஜுலை 1

2 கோடி ரூபா பெறுமதியான தங்க நகைகளை அணிந்து வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 47 வயதுடைய ஒருவரை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்றுக்காலை கைது செய்துள்ளதாக சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். 995 கிராம் நிறையுடைய 24 கரட் தங்க நகைகளை அணிந்திருந்த நிலையிலேயே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ-125)

# விபத்தில் மருத்துவர் படுகாயம்

யாழ்., சாவகச்சேரி – நுணாவில் பகுதியில் கார் ஒன்றும் மோட்டார் சைக்கிளும் மோதிக்கொண்டதில் மருத்துவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்து ஏ-9 வீதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த மருத்துவரே இந்த விபத்தில் படுகாயமடைந்தார். அவர் முதலில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-20)

## வெருட்டு வினையானது

# கயிறு இறுகியதால் இளைஞர் உயிரிழப்பு

வவுனியா, ஜுலை 1

வவுனியா, நந்திமித்திரகம பகுதியில் வசிக்கும் இளைஞர் ஒருவர் காதலியை வெருட்டுவதற்காக கழுத்தில் கயிற்றை மாட்டியபோது, எதிர்பாராத விதமாக கயிறு இறுகியதால் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது:-

கடந்த இரு தினங்களுக்கு முன் வவுனியா போகஸ்வேவ பகுதியைச் சேர்ந்த 17 வயதான சிங்கள இளைஞர் ஒருவரைக் காணவில்லை என மாமடுப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த இளைஞர் தூக்கிட்டு மரணித்த நிலையில் நந்திமித்திரகம பகுதியில் சடலமாக நேற்று ஞாயிற்றுக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டார். தனது 15 வயதுக் காதலியை வெருட்டுவதற்காகவே அவர் கழுத்தில் கயிற்றை மாட்டினார் எனவும், ஆனால் எதிர்பாராத வகையில் குறித்த கயிறு இறுகியதால் அவர் மரணித்துள்ளாரெனவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

வவுனியா மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்ட இளைஞனின் சடலம் உடற்கூற்று பரிசோதனையின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மாமடுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-18)

## மாநகர சபை, யாழ்ப்பாணம்
## கழிவகற்றல் சேவை தொடர்பான பொது அறிவித்தல்

மாநகரசபையின் எல்லைக்குள் 01.07.2024ம் திகதி தொடக்கம் 30.06.2025ம் திகதி வரையான காலப்பகுதியில் திரவக் கழிவு மற்றும் மலக் கழிவு அகற்றல் சேவை வழங்குவதற்காக சபையின் வாகனங்களுக்கு மேலதிகமாக பின்வரும் சேவை வழங்குநர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. குறித்த சேவைகளுக்கான அனுமதிச் சிட்டைகளை (TOKEN) அலுவலக நாட்களில் பொது சுகாதார பொறியியற் பிரிவில் விண்ணப்பித்து முன்னராங்க அலுவலகத்தில் பி.ப 3.00 மணி வரை கொடுப்பனவை மேற்கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

2023.06.02ம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி இல-2335 இல், யாழ்ப்பாணம் மாநகரசபையினால் வழங்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் உணவுக்கழிவு நீர் லீற்றர் ஒன்றுக்கு ரூ.0.90 சதமும், மலக்கழிவு நீர் லீற்றர் ஒன்றுக்கு ரூ.1.55 சதமும் கட்டணமாக அறவிடப்படுகிறது.

சேவை வழங்குநர் விபரம் வருமாறு:

| சேவை வழங்குநர் பெயர் | வாகன இலக்கம் | கொள்ளளவு (லீற்றர்) | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|
| திருமதி.ப.புனிதா | RE-0460 | 4000 | 077 353 6755 |
| திருமதி.கு.சிவானுயா | RZ-5120 | 4000 | 077 326 8667 |
| திரு.வி.சுகுமாரன் | RC-9043, RX-2460 | 4000 | 077 773 0597 |
| திருமதி.உ.பிரமிளா | RE-0113 | 5000 | 077 901 3863 |
| திரு.கு.விக்கினராசா | 36 Sri7705 | 5000 | 077 331 3671 |
| திருமதி.அ.சகாயினி | RE-7174 | 5000 | 077 166 3411 |
| திரு.வி.சுகுமாரன் | RY-7761 | 5000 | 077 773 0597 |
| திருமதி.அ.சகாயினி | LO-5090 | 6000 | 077 166 3411 |
| திரு.வி.சுகுமாரன் | LL-7868, LP-3472 | 6000 | 077 773 0597 |

தனியார் வணிக நிலையங்களில் கழிவகற்றல் சேவைக்கு பின்வரும் சேவை வழங்குநருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| சேவை வழங்குநர் பெயர் | வாகன இலக்கம் | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| திரு. செல்லன் ஜெகதீஸ்வரன் | RA-1689 GN-2195 | 0772272503 |

மேற்குறித்த சேவை வழங்குநர்கள் தவிர்ந்த ஏனைய வழங்குநர்களிடமிருந்து சேவை பெறப்படுவதால் ஏற்படும் அசௌகரியங்களை தவிர்த்து கொள்ளுமாறு சேவை பெறுநர்களை கேட்டுக் கொள்கின்றேன்.

மாநகர ஆணையாளர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மந்திகையில்...

துள்ளார். பத்தினியம்மன் கோவிலடி, துன்னாலை வடக்கைச் சேர்ந்த நாகராசா பாலச்சந்திரன் (வயது - 39) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த செவ்வாய்க்கிழமை, மந்திகை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக டிப்பர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகின. இதில் படுகாயங்களுக்குள்ளான இளம் குடும்பஸ்தர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

அவர், மீண்டும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தநிலையிலேயே, நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் உயிரிழந்துள்ளார். அவரது உடல், மரண விசாரணைக்காகவும் உடற்கூற்றுப் பரிசோதனைக்காகவும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (அ-ப-100)

## சம்பந்தர்...

கடந்த சில தினங்களாகவே உடல்நலம் குன்றியிருந்தார் பெருந்தலைவர் இரா. சம்பந்தன். இந்தநிலையில், நேற்றிரவு அவரது வீட்டில் இருந்தபோது உடல் நிலை திடீரென மோசமடைந்தது. அதனையடுத்து அவசர அவசரமாக கொழும்பில் உள்ள லங்கா மருத்துவமனைக்கு அவர் கொண்டுசெல்லப்பட்டார். எனினும் அவர் அங்கு உயிரிழந்துவிட்டாரென மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர்.

இரா.சம்பந்தரின் பூதவுடல் கொழும்பில் உள்ள மலர்ச்சாலையொன்றில் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து அவரது பூதவுடல் நாடாளுமன்றிலும் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின்னரே அவரது சொந்த இடமான திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது. சம்பந்தரது பூதவுடல் அஞ்சலிக்காக கொண்டுசெல்லப்படவுள்ள இடங்கள் மற்றும் ஏனைய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என அவரது குடும்பத்தினர் 'உதயனுக்கு' நேற்றிரவு தெரிவித்தனர்.

**சம்பந்தர் - சிறு வரலாற்றுக்குறிப்பு**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழரசுக் கட்சி என்பவற்றின் முன்னாள் தலைவரான இரா. சம்பந்தன் மிகநீண்ட - நெடிய - அரசியல் வரலாற்றைக் கொண்டவர். தமிழ்மக்களின் உரிமைக்காக அரசியல் ரீதியாக சுமார் 70 வருடங்கள் போராடியவர் இரா.சம்பந்தன். 6 தடவைகள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த இரா. சம்பந்தன் 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 3 ஆம் திகதி முதல் 2018 டிசெம்பர் வரையான காலப்பகுதியில் இலங்கை நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராகவும் பதவி வகித்தவர்.

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இரா. சம்பந்தனின் தந்தையான ஏ. இராஜவரோதயம் கல்லோயா திட்டத்தில் பணியாற்றியவர். இரா. சம்பந்தன் யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரி, மொரட்டுவ புனித செபஸ்தியான் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்று, பின்னர் இலங்கை சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று சட்டத்தரணியானார். லீலாதேவி என்பவரைத் தனது வாழ்க்கைத்துணையாக்கிய சம்பந்தருக்கு, சஞ்சீவன், செந்தூரன், கிரிசாந்தினி என மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

தமிழ் மக்களின் உரிமைக்காக அரசியல் ரீதியாகப் போராடுவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளால், தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக 20 வருடங்களுக்கும் மேலாகப் பதவி வகித்த சம்பந்தர், இறுதிவரை தமிழ்த் தேசியப் பயணத்தில் தளராது நின்ற ஒரு பழம் பெரும் அரசியல்வாதி.

அத்துடன் சிங்கள அரசியல்வாதிகளும் வியக்கும் வகையிலான அரசியல் அறிவும், அனுபவமும் கொண்டவராகவும் அவர் விளங்கினார். அத்துடன் தமிழ்மக்களின் பிரச்சினை தொடர்பில் தீர்க்கமான, தொலைநோக்கான பார்வை கொண்டவராகவும் சம்பந்தர் இறுதிவரை செயற்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. சம்பந்தரது மறைவு தமிழ்மக்களின் அரசியல் பயணத்தில் பேரிழப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

சம்பந்தரின் மறைவிற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச உள்ளிட்ட பல அரசியல் தலைவர்களும் தமது இரங்கலை சமூகவலைத்தளங்களில் பதிவிட்டுள்ளனர். (அ-26-125)

## ஊசிக்குப்...

நிலையில் ஊசி போடுவதற்குப் பயந்ததால் மருத்துவமனையில் இருந்து இரவு வேளை வீடுநோக்கித் தப்பிச் சென்றுள்ளார்.

இந்த நிலையிலேயே அவர் வவுனியா கோவில்புதுக்குளம், ராணிமில் வீதி சந்திப் பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் குறித்து வவுனியாப் பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பக் கட்ட விசாரணையின்போது வீதியால் சென்ற வாகனம் ஒன்று குறித்த நபர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளதாகவும், இதன் காரணமாகவே அவர் உயிரிழந்துள்ளார் எனவும் தெரியவந்துள்ளது. (அ-22-18)

## பெரமுனவின்...

யாகவே எதிர்வரும் 20 ஆம் திகதி பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ச நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார் எனவும், இதற்காக விசேட நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரியவருகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கட்சி ஆதரவளிக்க வேண்டும் என பெரமுனவின் எம்.பி.க்கள் குழுவொன்று வலியுறுத்தி வருகின்றது. ஆனால் கட்சி சார்பில் வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படவேண்டும் என மற்றுமொரு எம்.பி.க்கள் குழு அழுத்தம் கொடுத்துவருகின்றது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. (அ-ம44)

## புலிகளுக்கு...

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாங்கள் இன்னும் போர் பற்றிக் கதைக்கின்றோம் எனச் சிலர் கூறுகின்றனர். அவ்வாறு சொல்பவர்கள் போர் பற்றி தற்போது புத்தகமும் எழுதுகின்றனர்.

ரணசிங்க பிரேமதாஸ புலிகளுக்கு ஆயுதம் வழங்கினார் என்பதை அறிவோம். ஆனால், மற்றுமொரு கட்சியான ஜே.வி.பி.யும் ஆயுதம் வழங்கியது என பிள்ளையான் கூறியுள்ளார். அதுபற்றியும் விசாரணை நடத்தப்படவேண்டும்.

புலிகளுக்கு ஆயுதம் வழங்குவதற்கு அந்த அரசியல் கட்சியிடம் துப்பாக்கிகள் இருந்தனவா? அவ்வாறு வழங்கி இருந்தால் அந்தக் கட்சியின் கொள்கை பற்றி நாட்டு மக்கள் அறியவேண்டும் - என்றார். (அ-ச-44)

## இரணைமடுவில்...

திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தின் தரம் - 9 மாணவனுமான செல்வரத்தினம் றுசாந்தன் ( வயது-14) என்பவரே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டவராவார்.

கிளிநொச்சி நீர்ப்பாசனக் குளமான இரணைமடுக்குளத்தில் நீராடுவதற்காக றுசாந்தன் தனது சகோதரன் உள்ளிட்ட மூவருடன் நேற்றுமுன்தினம் மதியம் சென்றிருந்தார். இந்தநிலையில் திடீரென றுசாந்தன் நீரில் மூழ்கியதால், அவருடன் சென்றவர்கள் செய்வதறியாது அருகில் இருந்த படைமுகாமுக்குச் சென்று உதவி கோரினர். அத்தோடு உறவினர்களுக்கும் இதுகுறித்து தகவல் வழங்கினர். இதனையடுத்து நேற்றுமுன்தினம் நீரில் மூழ்கிய றுசாந்தனைத் தேடும் பணிகள் இரவிரவாக முன்னெடுக்கப்பட்டபோதும், எவ்விதப் பயனும் கிட்டவில்லை.

இந்தநிலையில், நேற்றுக்காலை அவரது சடலம் மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-27-66)

## வெட்டியவர்...

இந்த வாள்வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்திருந்தார். அவர் தற்போது யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் நிலையில், இந்தத் தாக்குதலின் சந்தேகநபரை பொலிஸார் தேடிவந்தனர்.

இந்தநிலையிலேயே வாள்வெட்டுச் சம்பவத்தின் பிரதான சந்தேகநபர், கோண்டாவில் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் வைத்து , யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார். அவர் இன்னும் பல வாள்வெட்டுச் சம்பவங்களோடும் தொடர்புடையவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர், யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவில் பாரப்படுத்தப்பட்ட பின்னர் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-26-125-27)

## கதிர்காமம்....

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் இந்தப் பாதையை திறந்து வைத்தார்.

பிரதேச செயலகம், பிரதேச சபை, சுகாதார அமைச்சு, பொலிஸ் மற்றும் இராணுவத்தின் மேற்பார்வையுடன் பாதயாத்திரிகர்களுக்காக மருத்துவம், நீர் வழங்கல், தங்குமிடம் மற்றும் சுகாதார வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நிகழ்வில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் கலந்துகொண்டார். (அ-ச-50-66)

## பாடசாலைகளுக்கு...

னெடுக்கப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டத்தின்போது கண்ணீர்ப்புகைத் தாக்குதல் மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் என்பன மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்தத் தாக்குதல் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் முன்பாக இந்தப் போராட்டம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பொலிஸாரின் தாக்குதல்களை எதிர்த்து எதிர்வரும் 2 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு பாடசாலைகளுக்கு எதிரில் ஆசிரியர்கள், அதிபர்கள் இணைந்து எதிர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுக்க உள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். குறித்த போராட்டத்தில் பெற்றோரும் இணைந்து கொள்வார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில், எதிர்வரும் 4 ஆம் திகதி அனைத்து தொழிற்சங்கங்களையும் கொழும்புக்கு அழைத்து பேச்சுகளை முன்னெடுக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம)

## புனிதத்தையும்...

நல்லூர் ஆலய மஹோற்சவ காலத்தில் முருகப் பெருமான் வலம்வருகின்ற வெளிவீதிச் சூழலில் புனிதத்தையும், பக்தர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துமாறு யாழ். மாநகர சபையிடம் தவத்திரு.வேலன் சுவாமிகள் கோரிக்கைவிடுத்துள்ளார்.

காலங்காலமாக நல்லூர் ஆலய மஹோற்சவ காலத்தில் யாழ். மாநகர சபை தனது பணிகளை செவ்வனே சிறப்பாக நிறைவேற்றி வந்திருக்கின்றது. ஆனால், இந்த வருடம் சிலரின் அழுத்தங்கள் காரணமாக, காலங்காலமாகப் பேணப்பட்டு வந்த நடைமுறைகளை யாழ்.மாநகர சபையானது மாற்ற முயற்சிப்பது ஏற்றுக்கொள்ளப்பட முடியாது.

தன்முன் அனைவரும் சமம் என்ற நல்லூர் கந்தப் பெருமானுடைய தனித்துவத்தைப் பாதிக்கும் வகையில், ஒருசிலரை, முருகப்பெரு மான் வலம்வரும் வீதியில் பாதணிகளுடன் அனுமதிப்பது பல்லாயிரக்கணக்கான முருக அடியார்களின் மனதைப் புண்படுத்தும் செயலாகும். அதுமட்டுமன்றி அங்கப்பிரதிஷ்டை செய்கின்ற அடியவர்களுக்கு சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்தும். அத்துடன் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் நடமாடுகின்ற வெளிவீதியில் அத்தியாவசிய வாகனங்கள் தவிர ஏனைய வாகனங்களை அனுமதிப்பது, அடியவர்களின் பாதுகாப்புக்கு இடையூறு விளைவிப்பதோடு பக்தர்களிடையே பாகுபாட்டையும் ஏற்படுத்தும். ஆகவே காலங்காலமாகப் பேணப்பட்டு வந்த அதே நடைமுறைகளையே இந்தவருட மஹோற்சவ காலத்திலும் நடைமுறைப் படுத்த வேண்டும் என்று வேலன் சுவாமிகள் யாழ். மாநகரசபையிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-ப)

## வெளிநாட்டு....

காட்டி, 50 இலட்சம் ரூபா பணத்தை மானிப்பாயைச் சேர்ந்த பெண்ணொருவர் பெற்றுள்ளார். எனினும் அவர் வாக்குறுதியளித்த காலப் பகுதிக்குள் அந்த இளைஞரை

வெளிநாட்டுக்கு அனுப்பவில்லை. அத்தோடு தான் பெற்றுக்கொண்ட பணத்தையும் அவர் திருப்பிக் கொடுக்கவில்லை. இதனால் பாதிக்கப்பட்ட இளைஞர், யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய் தார். இதனையடுத்து மோசடியில் ஈடுபட்ட பெண்ணைக் கைது செய்த யாழ்.மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவினர், அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சர்வதேச நீதி தேவை; உறவுகள் போராட்டம்

தமது காணாமலாக்கப்பட்ட பிள்ளைகளுக்கு சர்வதேசம் நீதியைப் பெற்றுத்தரவேண்டும் என்று வலியுறுத்தி கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் படங்களைத் தாங்கியவாறு கிளிநொச்சி மாவட்ட காணாமல் ஆக் கப்பட்டோரின் சங்கத்துக்கு முன்பாக ஏ-9 வீதியில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது. (ச-113-27)

## பெரமுனவின் 12 உறுப்பினர்கள் ஐ.ம.ச.கூட்டணியுடன் இணைவு

யாழ்ப்பாணம், ஜூலை 1

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் நாடாளுமன்றத்தின் 12 உறுப்பினர்கள், ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியுடன் இணையவுள்ளனர் என்று அந்தக்கட்சியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கட்சி யாப்பின் பிரகாரம் அவர்களுக்குப் பதவிகள் வழங்கப் படவுள்ளன. தமிழ், முஸ்லிம் எம்.பி.க்கள் உட்பட புதிதாக 30 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டணியில் இணையவுள்ளனர்.

கட்சிக்குப் புதிய அங்கத்தவர்களை இணைக்கும் திட்டம் வெற்றிகரமாகவுள்ளது. தற்போது புதிதாக இணைந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 20 இலட்சத்தைத் தாண்டியுள்ளது. வடக்கு - கிழக்கை மையமாகக் கொண்டு செயற்படும் பிரதான கட்சிகளைக் கூட்டணியில் இணைப்பது குறித்து இன்னும் பேச்சு ஆரம்பமாகவில்லை.

அதற்குரிய பேச்சை முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கின்றோம் - என்றார். (ப-44)

## கடன் சீரமைப்பு ஒப்பந்தம் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு



கொழும்பு, ஜூலை 1

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பான உடன்படிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டால் அதனை எதிர்க்கப் போவதில்லை என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு கடன் மறுசீரமைப்பு அவசியமானதொன்று. அந்தவகையில் இந்தப் பிரேரணையை எதிர்க்க முடியாது. அது தொடர்பில் வாக்களிக்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டால் அதற்கு எதிராக வாக்களிக்கமாட்டோம் என்று முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். (ச-இ)

## குடைச்சுவாமி குருபூசை தினம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

ஈழத்துச் சித்தர் குடைச்சுவாமிகளின் மாதாந்தக் குருபூசை நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள குடைச்சுவாமிகளின் சமாதி ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

காலை 8.30 மணியளவில் கூட்டுப் பிரார்த்தனை ஆரம்பமாகி தொடர்ந்து முற்பகல்11 மணியளவில் குருபூசை நிகழ்வுகளும் அதனைத் தொடர்ந்து விசேட அன்னதானமும் நடைபெறுமென ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ச-66)

## திருகோணமலையில் அமைதிப் பேரணி

திருகோணமலை, ஜூலை 1

வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கோணேஸ்வர ஆலயத்தின் புனிதத்தன்மையைப் பாதுகாக்க வலியுறுத்தி இன்று திங்கட்கிழமை அமைதிப் பேரணி காலை 9 மணியளவில் ஆலய அலுவலகத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபையினர், தொண்டர்கள் மற்றும் சைவ அடியவர்கள் இணைந்து இந்த அமைதிப் பேரணியை ஏற்பாடு செய்துள்ளனர். (ச-66)

## மாபெரும் தாச்சித் தொடர் இன்று இறுதிப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 1

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளை வளர்க்கும் நோக்குடன், தமிழ் மக்கள் கூட்டணியின் விளையாட்டுத் துறை, யாழ்.மாவட்ட ரீதியில் முன்னெடுத்த, மாபெரும் தாச்சிப் போட்டியின் இறுதிப் போட்டி, தாவடி காளியம்மாள் விளையாட்டு மைதானத்தில் இன்று திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது .

போட்டியில் சங்கானை கிங்ஸ் அணியை எதிர்த்து ஆனைகோட்டை சித்திவிநாயகர் அணி மோதவுள்ளது.

தமிழ் மக்கள் கூட்டணியின் விளையாட்டுத்துறைத் தலைவர் மயூரன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக மாநகரசபையின் முன்னாள் முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-125-66)

**பண்ணை வேலைக்கு ஆள் தேவை**

பண்ணை வேலைக்கு ஆள் தேவை. சம்பளம் சுமார் 55000/=, வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF & ETF முழுவதும் எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலை செய்வதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்)

தொடர்பு: 076 778 8493 / 077 966 9498 / 076 760 0403

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி ஈச்சமோட்டையில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 614 6434

**வங்கி மீதி வசதி (SHOW MONEY)**

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு: 074 173 7684



புங்குடுதீவு கண்ணகை அம்மன் என வழங்கும்
ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்
கண்ணகைபுரம்

**பத்திரகாளி அம்மன் வேள்வி (பொங்கல்) 2024**

அன்பார்ந்த அம்பிகை அடியார்களே!

உலகையெல்லாம் பரந்து வாழும் எமை காத்தருளும் அம்பிகை ஆலயத்தின் காவல் தெய்வமான பத்திரகாளியை குளிர்விக்க நடாத்தப்படும் பத்திரகாளி அம்மன் வேள்வியானது குரோதி வருடம் ஆனி மாதம் 22ஆம் நாள் சனிக்கிழமை (06.07.2024) அன்று நடைபெற அம்பிகையின் திருவருள் கூடி உள்ளது எனவே அம்பிகை அடியார்கள் ஆசார சீலர்களாய் ஆலயத்தில் இடம்பெறும் அபிஷேகம், பொங்கல் மற்றும் பூஜைகளில் பங்குபற்றி அம்பிகையின் திருவருளை பெற்று உய்யுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

**பூஜைகள்:**

காலை 8.00 மணிமுதல் மதியம் 12.00 மணிவரை இடம்பெறும். மதியம் 1.00 மணியளவில் அன்னதானம் இடம்பெறும்.

அம்பிகை அடியார்களும் ஆலயத்தில் நடைபெறும் வேள்வி பொங்கல் நிகழ்வில் பொங்கல் பொங்கி பங்குபற்ற முடியும்.

தொடர்புகளுக்கு: 021 315 6666 / 077 717 4279

ஆலய நிர்வாக சபையினர்

**வெளிநாடுகளுக்கான துரித பொதிகள்**

சகல நாடுகளுக்குமான விசேட விலைக்கழிவு
(மற்றய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்)

திருமுருகன் பொதிகள் சேவை
321, K.K.S வீதி, யாழ்ப்பாணம்
0777 554 528

11 KG மேற்பட்ட பொதிகளுக்கு

| | |
|---|---|
| UK | - 1300/= |
| Canada | - 2400/= |
| Australia | - 2300/= |
| USA | - 2400/= |
| France | - 1990/= |
| Germany | - 1990/= |

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில்
A-9 வீதி முகப்புடன் 8 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- இருபதடிப்பாதை (20).
- கைதடிச் சந்தி 100M தூரம்.
- சித்த வைத்தியசாலை முன்பாக.
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை.
- காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை ரூபா. 2000000/= (இருபது இலட்சம் ரூபாய்)

Golden Real Estate (pvt) Ltd.

077-029 4164
077-329 4130
077-294 1521

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம் : advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01. 07. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.